உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

சுடர் : 41
கதிர் : 205

வெள்ளிக்கிழமை
19 ஜூன் 2026

ஆனி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## தெல்லிப்பழை மருத்துவமனையை மத்திக்குள் முடக்குவதற்குச் சதி!

### கஜேந்திரகுமார் எம்.பி. காட்டம்

**யாழ்ப்பாணம், ஜூன் 19**

**தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு செல்வதற்கு பல்வேறு சதி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதை நாங்கள் தீர்க்கமாக எதிர்ப்போம் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

»11

### வெங்கலச் செட்டிகுளம்

## பிரதேச செயலாளருக்கு பணித்தடை!

வவுனியா, ஜூன் 19
வவுனியா - வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலாளருக்கு பொதுச்சேவைகள் ஆணைக்குழுவால் பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது.
வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலாளர், வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித்

»11

## ரயிலுடன் மோதி சிப்பாய் பலி!

### அரியாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ்ப்பாணம் - அரியாலைப் பகுதியில் ரயில்முன் பாய்ந்து இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்றுத் தனது உயிரை மாய்த்துள்ளார்.

»11



### செம்மணிப் புதைகுழியில்

## 7 என்புத் தொகுதிகள் நேற்றும் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூன் 19
யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து 7 என்புத் தொகுதிகள் நேற்றும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

»11

## செம்மணிப் புதைகுழிக்கு நீதியமைச்சர் இன்று வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 19
நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தலைமையிலான குழுவினர் அரியாலை செம்மணிப் புதைகுழியை இன்று பார்வையிடவுள்ளனர்.
செம்மணிப் புதைகுழி தொடர்பான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் தற்போது

»11

## செம்மணிப் புதைகுழிக்கு நீதியை விரைவுபடுத்துக!

### இன்று காலை போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 19
அரியாலை - செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி இன்று காலை கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

»12



## சுரேஷ் சாலேவுக்கு நாம் நற்சான்றிதழ் வழங்கோம்

### பிரதான எதிர்க்கட்சி அதிரடி

கொழும்பு, ஜூன் 19
சுரேஷ் சலேவுக்கு நற்சான்றிதழ் வழங்குவதற்கு நாங்கள் தயாரில்லை. நீதியான விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியுடன் உள்ளோம் இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்

»11

## மாகாணசபையை அமுலாக்க அரசாங்கம் தயங்குவது ஏன்?

### ஐக்கிய சோசலிஷக் கட்சியின் சிறிதுங்க ஜயசூரிய காட்டம்



கொழும்பு, ஜூன் 19
இனப்பிரச்சினைக்கான குறைந்தபட்ச அரசியல் தீர்வாகவே மாகாணசபை முறை கொண்டுவரப்பட்டது. எனவே, அந்த மாகாணசபை முறைமையைக்கூட

»11

## கோத்தாபய ராஜபக்சவின் முன்னாள் செயலாளர் கைது

கொழும்பு, ஜூன் 19
கோத்தாபய ராஜபக்சவின் முன்னாள் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டார நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
இரு வெவ்வேறு அரச திணைக்களங்களில் ஒரே நேரத்தில் சம்பளம் பெற்றார் என்ற குற்றச்சாட்டு அவருக்கு எதிராகச் சுமத்தப்

»11

### கைதாவதைத் தடுக்கக்கோரிய

## கோத்தாபயவின் மனு புதன்வரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 19
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் தன்னைக் கைதுசெய்வதைத் தடுக்கக்கோரி கோத்தாபய ராஜபக்ச தாக்கல்செய்த ரிட் மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

»11

## ஹெரோய்னுடன் கைதானவரின் சொத்துகள் முடக்கம்!

யாழ்ப்பாணம், ஜூன் 19
ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட நபருக்குச் சொந்தமான பல சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன.

»11





முச்சந்தி முரளி

"எல்லாத்தையும் மெல்ல மெல்ல தங்கட கட்டுக்குள்ள கொண்டு போறதுதான் அவையின்ர பிளான் போல"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 18.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4464
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள்: 03 06 14 23
விசேட எழுத்து J

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 18.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1531
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள்: 17 34 35 58

**NLB ஜய**
திகதி 18.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0490
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள்: 7 7 9 5

**மெகா பவர்**
திகதி 18.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2570
ஆங்கில எழுத்து H
சுப்பர் இலக்கம் 10
வெற்றி இலக்கங்கள்: 22 34 59 70

**மஹஜன சம்பத**
திகதி 18.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6222
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள்: 6 7 3 1 2 2

**தன நிதானய**
திகதி 18.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2252
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள்: 09 19 73 76
விசேட எழுத்து K

**சுப தவசக்**
திகதி 18.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0338
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள்: 03 08 62

# நெல்லுக்கான நிர்ணய விலையை தட்டிக்கழிக்கின்றது அரசாங்கம்!

## வீதியில் இறங்கும் விவசாயிகள்

**கொழும்பு, ஜூன் 19**

**உரங்கள், எரிபொருள் மற்றும் விவசாய உள்ளீடுகளின் விலைகள் வரலாற்றில் என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளதால், சாதாரண நெல் கிலோவொன்றுக்கு குறைந்தபட்சம் 140 ரூபாவும், கீரிச் சம்பா நெல் கிலோவொன்றுக்கு 171 ரூபாவும் நியாயமான உத்தரவாத விலையாக அரசாங்கம் வழங்கவேண்டும் எனத் தேசிய விவசாய ஒற்றுமை ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னகோன் வலியுறுத்தியுள்ளார்.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்தின் விவசாய விரோதப் போக்கைக் கண்டித்து நாடு தழுவிய ரீதியில் இரண்டாம் கட்ட விவசாயப் போராட்டங்களை ஆரம்பித்துள்ளோம். சாதாரண நெல் கிலோவுக்கு 140 ரூபாவும், கீரிச் சம்பா நெல் கிலோவுக்கு 171 ரூபாவும் குறைந்தபட்ச விலையாக நிர்ணயிக்கப்பட வேண்டும். விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்கத் தடையற்ற எரிபொருள் மானியக் கோட்டா உடனடியாக வழங்கப்படவேண்டும். உரங்கள், கிருமி நாசினிகள் மற்றும் விதைநெல்லுக்கு விதிக்கப்பட்டுள்ள அனைத்து வரிகளும் முற்றாக நீக்கப்படவேண்டும். உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்குடன் வெளிநாடுகளில் இருந்து அரிசி, உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் இறக்குமதி செய்வது முற்றாக நிறுத்தப்படவேண்டும். தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 18 மாதங்கள் கடந்தபோதிலும், விவசாயிகளுக்கு உருப்படியான எதையும் செய்யவில்லை. அரசாங்கத்தின் அதிகாரத் திமிரா? அல்லது நாட்டின் இலட்சக்கணக்கான விவசாயிகளின் மக்கள் சக்தியா? பெரியது என்பதை மிக விரைவில் வீதியில் இறங்கி நிரூபிப்போம் - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 18.06.2026
தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0930
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம்: 4 1 3 6 0 3

**Super Ball**
திகதி 18.06.2026
தினம் வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3196
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கம்: 05 15 32 55

**சனிதா**
திகதி 18.06.2026
தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கம்: 06 51 60 61
வெற்றி வாரம் 5357

**SASIRI**
திகதி 18.06.2026
தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 1026
வெற்றி இலக்கம்: 05 31 46

**லக்ன ராசி**
திகதி 18.06.2026
தினம் வியாழக்கிழமை
கடகம்
வெற்றி இலக்கம்: 12 30 37 51
சீட்டிழுப்பு வாரம் 4908

**KAPRUKA**
திகதி 18.06.2026
தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 11
வெற்றி இலக்கம்: 15 21 24 48
வெற்றி வாரம் 2372

**அத கோடிபதி**
திகதி 18.06.2026
தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கம்: 11 15 16 17
வெற்றி வாரம் 3022

# பாடசாலை விடுதிகளுக்காக 1,008 மில்லியன் ஒதுக்கீடு!

கொழும்பு, ஜூன் 19

நாடெங்கிலும் உள்ள 126 பாடசாலை விடுதிகளை நவீன வசதிகளுடன் புனரமைத்து தரம் உயர்த்துவதற்காக 1,008 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பிரதமரும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய சமர்ப்பித்த பிரேரணைக்கே இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது. இலங்கையின் பல பாடசாலைகளில் உள்ள விடுதி விநியோகக் கட்டமைப்புகள், முறையான பராமரிப்பு இல்லாத காரணத்தினால் நாளுக்கு நாள் மிகவும் மோசமடைந்து வருவதாகக் கல்வி அமைச்சின் ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, அவர்களுக்குச் சிறந்ததொரு கல்வி மற்றும் ஆரோக்கியமான சுகாதாரச் சூழலை உருவாக்கிக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. (ச-இ)

# சுரேஷ் சாலே மீது சித்திரவதை சி.ஐ.டி. ஒப்புக்கொள்ளவில்லை

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

சுரேஷ் சாலே சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார் என சி.ஐ.டி.யினர் ஒப்புக்கொள்ளவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், சுரேஷ் சாலே சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார் என சி.ஐ.டி. ஒப்புக்கொண்டனர் என்பது உண்மை இல்லை. தடுப்புக்காவலில் உள்ள சந்தேகநபர் ஒருவர் நடத்தப்படவேண்டிய விதத்திலேயே சுரேஷ் சாலே நடத்தப்பட்டுள்ளார். சி.ஐ.டி.யினர் புதிய முறைமையைக் கையாளவில்லை. சந்தேகநபரொருவருக்கு சிறப்புச் சலுகையும் கிடையாது. அதேபோல எவரும் தவறாக நடத்தப்படுவதுமில்லை. ஏதேனும் பிரச்சினை இருந்தால் அது பற்றி சுரேஷ் சாலே நீதிமன்றத்தை நாடலாம். சுரேஷ் சாலே விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும்- என்றார். (ச-44)

# உணவுத் தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்போவதில்லை!

## சுரேஷ் சாலே தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் உள்ள, அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையிலும் தனது உண்ணாவிரதத்தைக் கைவிடப்போவதில்லை என திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சித்திரவதைக் கூடத்துக்கு மீண்டும் திரும்புவதைவிடத் தனக்கு மரணதண்டனை வழங்கப்படுவதே மிகவும் பொருத்தமானது.

என்னை அடைத்து வைத்துள்ள குறிப்பிட்ட தடுப்புக்கூண்டு ஒரு மனிதன் வாழமுடியாத நரகமாகும். அந்த நரகத்துக்குள் மீண்டும் செல்வதற்கு எனக்குச் சற்றும் விருப்பமில்லை. தற்போதைய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் இயக்குநருக்கு என் மீது தனிப்பட்ட மற்றும் அரசியல் ரீதியான கடுமையான குரோதங்கள் உள்ளன. அதனால் தான் திட்டமிட்டு நான் பழிவாங்கப்படுகிறேன். எனவே, என் கோரிக்கைகள் நிறைவேறும் வரை இந்த உண்ணாவிரதத்தை நான் ஒருபோதும் கைவிடப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# 192 உப தபால் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம்

கொழும்பு, ஜூன் 19

தபால் திணைக்களத்தில் நீண்ட காலமாகத் தற்காலிக மற்றும் பதில் கடமைகளில் ஈடுபட்டு வந்த 192 உப தபால் அதிபர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கும் நிகழ்வு கொழும்பு தலைமைத் தபாலகத்தில் நடைபெற்றது.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விசேட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அண்மையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இருந்து பதில் கடமைகளில் ஈடுபட்டு வந்த தகுதியான அதிகாரிகளுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.




இவர்களில் பெரும்பாலான அதிகாரிகள் கடந்த 2019ஆம் ஆண்டு முதல் சுமார் 7 வருடங்களாகத் தற்காலிகமாகவே இந்தப் பணியில் தங்களின் சேவையை வழங்கிவந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையில் டெங்குப் பரவல் இவ்வருடம் அபாய கட்டத்தில்!

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 19**

**இலங்கையில் நாளுக்கு நாள் டெங்கு நோய்ப் பரவல் மிகவும் அதிவேகமாக அதிகரித்து வரும் நிலையில், இந்த 2026ஆம் ஆண்டில் மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை ஆபத்தான ஒரு நிலையை எட்டும் அச்சுறுத்தல் காணப்படுவதாகச் சுகாதார அமைச்சின் செயலாளரும் விசேட மருத்துவ நிபுணருமான அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் முன்னெப்பொழுதும் இல்லாதவாறானதொரு அதிவேக அதிகரிப்பு பதிவாகிவருகின்றது. இலங்கை வரலாற்றிலேயே டெங்குப் பரவலின் ஆகக்கூடிய சிவப்புப் புள்ளி கடந்த 2017ஆம் ஆண்டில் தான் பதிவாகியிருந்தது. துரதிர்ஷ்டவச மாக, இந்த வருடத்துக்கான டெங்கு வரைபடத்தில் தற்போதைய பரவலைக் காட்டும் நீல நிறப் புள்ளி மிகவும் செங்குத்தாக மேல்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இது 2017 இன் நிலையைத் தொட்டுவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. இந்த ஆபத்தானநிலைநிறப்புள்ளியின்உயர்வைக்கட்டுப்படுத்தி, கீழ்நோக்கிப் பயணிக்கச் செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் உள்ளது. இந்நேரத்தில் அனைவரும் உச்ச கட்ட விழிப்புடன் செயற்படுவது மிகவும் முக்கியமானது - என்றார். (ச-இ)

## எல்—நினோ தாக்கத்தால் ஒக்ரோபரில் கனமழை

கொழும்பு, ஜூன் 19

வலுவடைந்துவரும் எல் நினோ காலநிலை மாற்றம் மற்றும் இந்தியப் பெருங்கடல் இரு முனையகத்தின் மாற்றங்கள் காரணமாக, நடப்பு ஆண்டின் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இலங்கையில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என மேற்கு அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தின் கடலோரப் பெருங்கடலியல் பேராசிரியர் சரித பத்தியராச்சி தெரிவித்துள்ளார். வலுவடைந்து வரும் எல்- நினோ எதிர்வரும் மாதங்களில் இலங்கையின் வானிலை வடிவங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வழக்கத்தைவிட அதிகமான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதுடன், அது 100 மில்லிமீற்றரைக் கடக்கக்கூடும். அடுத்த வருடத்தில் ஜனவரி முதல் ஏப்ரல் வரை மீண்டும் சராசரியைவிடக் குறைவான மழைவீழ்ச்சியே பதிவாக வாய்ப்புள்ளது. பசுபிக் பெருங்கடலின் மேற்பரப்பு வெப்பநிலை சராசரியைவிட 0.92C ஆக உயர்ந்துள்ளது. முன்னதாகக் கணிக்கப்பட்டதைவிட எல் -நினோ அதிக வலுவடையக்கூடும்என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## சுகாதாரம், ஊடகத்துறைக்கு கொரிய அரசாங்கம் ஆதரவு

கொழும்பு, ஜூன் 19

இலங்கையில் சுகாதாரம் மற்றும் ஊடகத்துறையின் எதிர்கால அபிவிருத்திக்காக கொரிய அரசாங்கத்தின் ஆதரவு தொடரும் என இலங்கைக்கான கொரிய தூதுவர் மியோன் லீ தெரிவித்துள்ளார். சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸவை அண்மையில் ஊடக அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடியபோது அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது இலங்கையின் மிக நெருங்கிய நட்பு நாடான கொரிய, நாட்டில் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு ஆதரவை வழங்கியதுடன், கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனங்கள் சுகாதாரத் துறைக்கு உயர் பங்களிப்பை வழங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)



## 5 பொருள்கள் விலை குறைப்பு

கொழும்பு, ஜூன் 19

இலங்கை வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய, லங்கா சதொச நிறுவனம் 9 அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைத்துள்ளது. இந்த விலைக் குறைப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதன்படி, கோதுமை மாவின் விலை கிலோவுக்கு 10 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 159 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், பொன்னிச் சம்பா அரிசி கிலோவுக்கு 6 ரூபாவாலும், சர்க்கரை கிலோவுக்கு 2 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன. அத்துடன், கடலை மற்றும் சிவப்பு நாடு, வெள்ளை நாடு உட்பட 5 வகையான அரிசி வகைகளின் விலை கள் கிலோவுக்கு 3 முதல் 5 ரூபா வரை குறைக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பேரிடர்களை எதிர்கொள்ள காப்புறுதித் திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் இயங்கும் விவசாய மற்றும் விவசாய காப்புறுதிச் சபையினால், அனைத்துப் பயிர்களையும் உள்ளடக்கிய வகையில் காப்புறுதித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, அந்தப் பயிர்ச்செய்கைகளுக்கு இயற்கையாக ஏற்படும் பேரிடர்களை ஈடுசெய்வதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக கறுவா, இறப்பர், வாழை, தேயிலை மற்றும் தென்னை ஆகிய பயிர்ச்செய்கைத்துறைகள் இதில் முன்னுரிமை பெற்றுள்ளன. இதற்கு மேலதிகமாக, விதைநெல் பண்ணைகளை இலக்குவைத்தும் காப்புறுதித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## பொலிஸ் காட்டின படம்

**கோ**ப்பாய் பொலிஸ் ஸ்ரேசன் இப்ப புது இடத்தில, புதுக் கட்டடத்தில இயங்கத் தொடங்கியிருக்குது. அந்தப் புதுக்கட்டடத் திறப்புவிழாவிலயும் திசைகாட்டிக்காரர் ஒரு அரசியல் வேலையைச் செய்திருக்கினம். இவ்வளவு காலமும் பொலிஸ் ஸ்ரேசன் பொதுமக்களின்ர வீடுகள், காணியளை அடாத்தாப் பிடிச்சு அங்கதான் இயங்கிக் கொண்டிருந்தது. தங்கட காணியையும், வீட்டையும் கேட்டால் ஆமியும், பொலிஸும் தங்களை ஏதும் செய்திடுமோ எண்ட பயத்தில இருந்த சனங்கள் பிறகு கொஞ்சம் தைரியம் வந்து 'தங்கட காணி, கட்டடங்களைத் திரும்ப தங்களிட்டையே தரச்சொல்லி' வழக்குப் போட்டவை. அந்த வழக்கும் கனகாலம் இழுபட்டாலும் இந்த வருசம் தீர்ப்பு வந்திட்டு. 'உடனடியா அந்த காணியளையும், கட்டடங்களையும் சனத்திட்ட ஒப்படைக்கோணும்' எண்டு வந்த தீர்ப்பால கோப்பாய் பொலிஸ்காரர் திக்குமுக்காடிப் போட்டினம்.

ரெண்டு வீடுகளை மட்டும் தங்கட பாவனைக்கு வைச்சுக் கொண்டு அக்கம் பக்கத்தில பிடிச்சு வைச்சிருந்த காணி, கட்டடங்களை முதல்ல விட்டவை. அவை விட்டவுடனேயே அந்தக் காணிக்குரியவை வந்து சுத்தம் செய்து, எல்லைபோட்டு வேலையளைத் தொடங்கிட்டினம். கோப்பாய் பொலிஸிட்ட இருந்த, பொலிஸ் ஸ்ரேசன் இயங்கிக் கொண்டிருந்த கட்டடங்களையும் தங்களிட்டத் தரச்சொல்லி, வீட்டுக்காரர்கள் போய்க்கேட்டிருக்கினம். ஆனால் அதுக்கு பொலிஸ்காரர் பஞ்சப்பாட்டுப் பாடத்தொடங்கிட்டினமாம். 'இப்பதான் பொலிஸ் ஸ்ரேசனுக்கு புதுக்கட்டடம் கட்டிக்கொண்டு இருக்கிறம். அது கட்டிமுடியும்மட்டும்இஞ்சஇருக்கவிடுங்கோ. இப்ப எங்கட பொலிஸ்காரர் இரவு யாழ்ப்பாணம் பொலிஸ் ஸ்ரேசனுக்குத்தான் போகினம். இப்ப இந்த இடத்தையும் விட்டிட்டு நாங்கள் போனால் இஞ்ச நடக்கிற குற்றங்களைத் தடுக்கிறது கஷ்டமாப் போடும்' எண்டெல்லாம் அவையின்ர காலில விழாத குறையாக் கெஞ்சிக் கூத்தாட, வளவுக்காரர்களும் சரியெண்டு கொஞ்ச நாள் இருக்கச் சொல்லிட்டினம்.

ஆனால் கோப்பாய் பொலிஸ் ஸ்ரேசன் புதுக் கட்டடத்துக்குப் போய், திறப்புவிழா நடந்த அண்டைக்கு இந்தப் பழைய பொலிஸ் ஸ்ரேசன் இயங்கின வீட்டுக்காரர்களையும் வரச்சொல்லி பொலிஸ்காரர் சொல்லியிருக்கினம். அந்த விழா வில ஏதோ தாங்கள் மனமிரங்கி, அந்த வீட்டை அதின்ர உரிமையாளர்களிட்டக் குடுக்கிற மாதிரி பில்டப் காட்டி, திறப்பையும் பெரிய எழுப்பமாக் குடுத்திருக்கினம். இத்தனைக்கும் அந்தக் கட்டடத்தை உடன குடுக்கச் சொல்லி நீதிமன்றம் தீர்ப்புக் குடுத்தே மாதக்கணக்காப்போட்டுது. அந்தத் தீர்ப்பை மதிக்காமல், வளவுக் காரரிட்ட கெஞ்சிக் கூத்தாடி அங்க இருந்திட்டு, இப்ப திறப்பு விழாவில தாங்களா அந்தக் கட்டடங்களை விட்டுக் குடுத்தமாதிரி பொலிஸ்காரர் படங்காட்டினவை. பகிடி என் னெண்டா, இன்டை வரைக்கும் அந்தக் கட்டடங்களும் வளவும் பொலிஸ் காரரின்ட கட்டுப்பாட்டில தான் இருக்கு.

திறப்பக் குடுத்துப் பேய்க்காட்டிப்போட்டு கட்டடங்களையும், வளவையும் குடுக்காம தாங்கள் வைச்சிருக் கிறதுதான் திசைகாட்டிக் காரரின்ட மாற்றமோ..?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லிபெல் ஃபைனான்ஸ் வடக்கு மாகாணம் முழுவதும் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்துகிறது.

வள்ளிபெல் பைனான்ஸ் நிறுவனம், இலங்கை முழுவதும் நிதி அணுகலை மேம்படுத்துவதற்கும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் தனது அர்ப்பணிப்பை மேலும் உறுதிசெய்யும்வகையில், நெல்லியடி, புதுக்குடியிருப்பு மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் மூன்று புதிய கிளைகளைத் திறந்து, நாடு தழுவிய தனது இருப்பை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

புதிதாக திறக்கப்பட்ட கிளைகள், வடக்கு தீபகற்பத்தில் உள்ள தனிநபர்கள், தொழில்முனைவோர் மற்றும் வணிகங்களுக்கு விரைவான மற்றும் அணுகக்கூடிய நிதித் தீர்வுகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரிவாக்கமானது VALLIBEL FINANCE இன் மூலோபாய வளர்ச்சிப் பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது, குறிப்பாக வடக்கு மாகாணத்திற்குள், பிராந்திய பொருளாதார முன்னேற்றத்திற்கு ஆதரவளிக்கும் அதேவேளையில் உள்ளூர் சமூகங்களுடனான தனது ஈடுபாட்டை நிறுவனம் தொடர்ந்து ஆழப்படுத்துகிறது.

நெல்லியடி மற்றும் புதுக்குடியிருப்புக் கிளைகள் 2026 ஜூன் 8 ஆம் திகதியன்றும், அதனைத் தொடர்ந்து கிளிநொச்சிக் கிளை 2026 ஜூன் 9ஆம் திகதியன்றும் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டன. இத்திறப்பு விழாக்களில் ஜயந்த ரங்கமுவ பெருநிறுவன நிர்வாக உறுப்பினர்கள், பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜயந்த ரங்கமுவ, அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறை, தொழில்முறைத் திறன் மற்றும் அப்பகுதியின் தனித்துவமான பண்பாட்டு, சமூக விழுமியங்களுக்கு மதிப்பளித்தல் ஆகியவற்றுடன் சமூகங்களுக்குச் சேவை செய்வதன் மூலம், வடக்குப் பிரதேசம் முழுவதும்தனது இருப்பைவிரிவுபடுத்துவதில் நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை வலியுறுத்தினார். சமூக வலுவூட்டல் மற்றும் பிராந்திய வளர்ச்சிக்கு நேர்மறையாகப் பங்களிக்கும் நீண்டகால உறவுகளைக் கட்டியெழுப்புவதில் வல்லிபெல் பைனான்ஸ் நிறுவனம் தொடர்ந்து உறுதியுடன் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

விரிவடைந்து வரும் கிளை வலையமைப்பின்மூலம், வல்லிபெல் பைனான்ஸ் நிறுவனம் குத்தகை, நிலையான வைப்புத்தொகைகள், தங்கக் கடன்கள் மற்றும் தானியங்கிப் பண எடுப்பு வசதிகள் உள்ளிட்ட விரிவான நிதித் தீர்வுகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. நவீன தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட சேவைத் தரங்களின் ஆதரவுடன், வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப தடையற்ற மற்றும் திறமையான நிதிச் சேவைகளை வழங்குவதை இந்நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது. வல்லிபெல் பைனான்ஸ், தனது சீரான செயற்றிறன் மற்றும் செயற்பாட்டுச் சிறப்பிற்காக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் வலுவான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இந்நிறுவனம், தனது மீள்திறன், சிறந்த சேவை மற்றும் வலுவான சந்தை நற்பெயரைப் பிரதிபலிக்கும் வகையில், 'தி குளோபல் எகனாமிக்ஸ்' இதழால் தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக சிறந்த நிதி நிறுவனம் என்ற பட்டத்தை வென்றுள்ளது.

இந்தப் புதிய கிளைகளின் தொடக்க விழாவின் மூலம், வல்லிபெல் பைனான்ஸ், புதுமையான மற்றும் நம்பகமான நிதித் தீர்வுகள் வாலிபிலக் கல்லின் வழியாக, இலங்கை முழுவதும் நிதி உள்ளடக்கத்தை விரிவுபடுத்துவதற்கும், உள்ளூர்ச் சமூகங்களுக்கு வலுவூட்டுவதற்கும், நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும் தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது.

# புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை ஆனைமுகனுக்குக் கொடியேற்றம்



கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

ஈழத்து வரலாற்றுச் சிறப்புமிக்க ஆன்மிகத் தலங்களில் ஒன்றாக விளங்கும் யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் அருள்மிகு ஆயக்கடவை ஆனைமுகப் பிள்ளையாரின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10.15 மணிக்குக் கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமாகின்றது.

ஐந்து கரங்களை உடைய அருள் பொழியும் ஆனைமுகப் பிள்ளையாரின் திருவருட் சிறப்பானது சொல்லில் அடங்காதது. தன்னை உண்மையான நம்பிக்கையோடும், தூய பக்தியோடும் வணங்கி நிற்கும் அடியார்களின் வினைகளை வேரோடு களைந்து, அவர்களுக்குச் சீரும் சிறப்பும் மிக்க நல்வாழ்வை அருள்பவர் ஆயக்கடவை சித்தி விநாயகப் பெருமான்.

இந்த ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா தொடர்ந்து பதினொரு தினங்களுக்கு வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது. மஹோற்சவமானது சிவஸ்ரீ. தியாக கெங்காதரக் குருக்கள், சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள், கிரியா கலாபமணி சைவாகமஜோதி சிவஸ்ரீ. சி. கிருஷ்ணசாமிக் குருக்கள் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.ள

அடியார்களின் வேண்டுதல்களையும் நம்பிக்கையையும் வினைகளையும் தீர்க்கும் விநாயகப் பெருமான், தன்னைச் சரணடையும் பக்தர்களுக்கு மங்களகரமான சுபீட்சம் நிறைந்த வாழ்வை வழங்குகிறார் என்பது திண்ணம். குறிப்பாக, சிறந்த புத்திர பாக்கியம் வேண்டியும், திருமணத் தடைகள் நீங்கி கல்யாணம் கைகூட வேண்டியும் திரளான அடியார்கள் இந்தத் தலத்தில் வேண்டுதல் செய்யும் அழகே தனியானது.

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். ஆனால், புதிய முயற்சிகளை மட்டும் தவிர்த்துவிடுவது நல்லது. மாலையில் குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு அமையும்.

**இடபம்:** இளைய சகோதரர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

**சிம்மம்:** மனதில் வீண்குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இளைய சகோதரர்கள் உதவி கேட்டுவருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**விருச்சிகம்:** நல்ல வாய்ப்புகள் எதிர்ப்படும் நாளாக அமையும். கணவன் – மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**தனுசு:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மகரம்:** இறைவழிபாட்டுடன் நாளைத் தொடங்குவீர்கள். உங்கள் உற்சாகம் மற்றவர்களையும் தொற்றிக்கொள்ளும். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை






## பொய்யாமொழி

**அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்**

**பொருள்:** அறத்தின் இயல்போடு பொருந்தி இல்வாழ்க்கை வாழ்பவன், பிறனுக்கு உரிமையானவளின் பெண் தன்மையை விரும்பாதவனே.


# நீதிக்காக போராடுவோம்!

யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழிக்குள் இது வரை 387 என்புத்தொகுதிகள் கண்டறியப்பட்டுள்ள செய்தி, இலங்கையின் போர்க்குற்ற வரலாற்றில் மற்று மொரு அதிர்ச்சியலையை ஏற்படுத்தியுள்ளது. மன்னார் 'சதொச' மனிதப்புதைகுழியை முந்திக் கொண்டு, இலங்கையின் மிகப்பெரிய மனிதப்புதை குழியாக இன்று செம்மணி உருப்பெற்றிருப்பது, ஈழத் தமிழ் இனம் இந்த மண்ணில் எதிர்கொண்ட திட்டமிட்ட அழித்தொழிப்பின் அசைக்க முடியாத சாட்சியாகும். மண்ணுக்குள் புதைக்கப்பட்டிருப்பது வெறும் எலும்புக்கூடுகள் அல்ல; அவை தங்களின் பிள்ளைகளையும், கணவன்மார்களையும், உறவுகளையும் தேடித் தேடி, கண்ணீரும் கவலையுமாக வாழ்நாளைக் கழித்து மடிந்துபோன ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் விடைதெரியா ஆழமான கேள்விகளாகும். இந்த மனிதப்புதைகுழி, ஈழ மண்ணில் நிகழ்ந்தது சாதாரண போரல்ல, மாறாக அது ஒரு கூட்டு இனப் படுகொலை என்பதை உலகிற்கு மீளவும் பறைசாற்றுகின்றது.

செம்மணிப் புதைகுழி என்பது கடந்த காலத்தின் ஒரு நிகழ்வு மட்டுமல்ல அது நிகழ்காலத்தில் சர்வதேச சமூகம் தமிழர்களுக்கு வழங்கவேண்டிய பரிகார நீதிக்கான பெரும் சவாலாகும். இத்தனை சான்றுகள் தினந்தோறும் மண்ணிலிருந்து உயிர்த்தெழுந்து உண்மைகளைப் பேசும்போதும், தென்னிலங்கை ஆட்சியாளர் களும் சர்வதேசப் பொறிமுறைகளும் குற்றவாளிகளைப் பாதுகாப்பதிலேயே குறியாக இருக்கின்றன. 'மாற்றம்' என்ற முழக்கத்துடன் வந்த திசைகாட்டி அரசாங்கமும் இந்த மனிதப் புதைகுழிகளுக்குப் பின்னால் இருக்கும் உண்மைகளை வெளிக்கொண்டுவரவோ, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் தேடித்தரவோ பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. இந்த மௌனமும் பாராமுகமும், தமிழ் மக்களின் நீதிக்கான தேடலை மேலும் காயப்படுத்துவதாகவே அமைகின்றது.

இத்தகையதொரு இக்கட்டான சூழலில், மண்ணுக்குள் புதைக்கப்பட்ட எமது உறவுகளுக்கான நீதியைத் தேடிப் பெறுவது என்பது எமது கட்டாயக் கடமை என்பதை நாம் அனைவரும் உணரவேண்டும். குறிப்பாக, தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் தங்களின் தற்காலிக அரசியல் இலாபங்களையும், உள்வீட்டுப் பூசல்களையும் கடந்து, இந்த விவகாரத்தைச் சர்வதேச அரங்கில் ஒரு பலமான அரசியல் ஆயுதமாக முன்வைக்க வேண்டும். அதேபோல, சமூகப் பொறுப்பு மிக்க பொது அமைப்புகளும், எப்போதுமே சமூக மாற்றத்தின் உந்துசக்தியாகத் திகழும் யாழ்.பல்கலைக் கழக மாணவர்களும், பொதுமக்களும் ஒன்றிணைந்து இதற்கான நீதியை வலியுறுத்தித் தொடர்ச்சியான மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இந்த மனிதப்புதைகுழிகளின் உண்மைத் தன்மையை ஆவணப்படுத்தி உலக நாடுகளின் மனச்சாட்சியை உலுக்கவேண்டும்.

நினைவுகளையும் தடயங்களையும் அழித்துவிடுவதன் மூலம் ஒரு இனத்தின் நீதிக்கான போராட்டத்தை மழுங்கடித்துவிடலாம் எனப் பேரினவாதம் கணக்குப் போடுகிறது. ஆனால், செம்மணி மண் ஒவ்வொரு முறையும் எலும்புக்கூடுகளை வெளியே தள்ளும்போது, அது தமிழர்களின் மறதிக்கு எதிரான போராகவே மாறுகிறது. இந்த என்புத்தொகுதிகள் யாருடையவை, இவர்கள் எப்படிக் கொல்லப்பட்டார்கள், இதற்குக் காரணமான சூத்திரதாரிகள் யார் என்பது சட்டபூர்வமாக வெளிப்படுத்தப்பட்டு, சர்வதேசத்தின் முன்னிலையில் குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வரை ஈழத்தமிழர்களின் ஜனநாயகப்போராட்டம் ஓயப்போவதில்லை. எமது கூட்டுப் போராட்டங்கள் மட்டுமே மண்ணுக்குள் புதைக்கப்பட்ட எமது உறவுகளின் ஆத்மாவிற்கு உண்மையான அமைதியைத் தரும்.



# 'கடனிறுக்க வகையின்மை' சட்டமூலம் சான்றுரைப்பு!

**கொழும்பு, ஜூன் 19**

**மீட்பு புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை சட்டமூலத்தில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தியுள்ளார்.**

இந்தச் சட்டமூலம் 2026.03.17ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டதுடன், 2026.05.06ஆம் திகதி இது விவாதத்துக்கு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பொருளாதார நெருக்கடியால் கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் தனிநபர்கள் மற்றும் வணிக நிறுவனங்களை திவாலாகிப் போகாமல் பாதுகாப்பதே இந்தப் புதிய சட்டத்தின் நோக்கமாகும்.

கடன் வாங்கிய நபர் கடும் நஷ்டத்தைச் சந்திக்கும் போது, அவரது நியாயமான வாழ்வாதார வருமானம் மற்றும் அத்தியாவசியச் சொத்துகளைப் பலவந்தமாகப் பறிமுதல் செய்யாத வாறு பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

தற்காலிக விடுப்புக் கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாத இக்கட்டான சூழலில், சட்ட ரீதியான தற்காலிக விடுப்பு மற்றும் கடன் பாதுகாப்பு விதிகள் வழங்கப்படுகின்றன. (ச-இ)



## பஸ் மோதியதில் ஆசிரியை சாவு

**கொழும்பு, ஜூன் 19**

ஏ-9 வீதியின் பூனாவை, கும்புகொல்லேவ பகுதியில் பேருந்து மோதியதில் பாடசாலை ஆசிரியை ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கண்டியிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று, மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியையே விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பூனாவை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)



## கடற்பரப்புகளுக்கு 'அம்பர்' எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 19**

மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு ஏற்படக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் 'அம்பர்' எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பிட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வரை வீசக்கூடும்.

இதன் காரணமாக, குறித்த கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பான நிலைக்கு மாறக் கூடும். கடற்றொழிலாளர்கள் மிக வும் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ச-இ)

## ரூபா வலுவடைவு

**கொழும்பு, ஜூன் 19**

அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்று வியாழக்கிழமை சற்று வலுவடைந்துள்ளது என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. மத்திய வங்கி வெளியிட்டுள்ள உத்தியோக பூர்வ நாணய மாற்று வீதங்களின் படி, டொலரின் விற்பனை விலை 339 ரூபா மட்டத்தில் ஸ்திரமாகப் பேணப்பட்டு வருகின்றது. அதன்படி அமெரிக்க டொலர் கொள்வனவு விலை 329.18 ரூபாவாகவும் விற்பனைவிலை 339.06 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (ச-இ)



## இறக்கத்தில் தங்கம் விலை

**கொழும்பு, ஜூன் 19**

உள்நாட்டுச் சந்தையில் தங்கத்தின் விலையில் நேற்று சிறிய மாற்றம் பதிவாகியுள்ளதாக அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 1000 ரூபாவால் குறைந்து 392,000 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

அதேவேளை, 22 கரட் தங்கம் ஒரு பவுண் 360,600 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

ஓ
கணபதிதுணை





# சாவகச்சேரி, கல்வயல், பெருங்குளம்
# அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

## ஸர்வ மங்களங்கள் நிறைந்த "பராபவ" (2026) வருஷ திவ்ய ப்ரம்மோற்சவ சிறப்பு மலர்.

### கணபதித்யானம்

ஓம்
சிறீகாந்தோ மாதுலோ யஸ்ய ஜனனி
ஸர்வமங்களா, ஜனக ஸங்கரோதேவ
தம் வந்தே குஞ்சாரரும்

மஹா விஷ்ணு வையே மாமனாகவும்
நித்திய மங்களமான பார்வதி தாயாகவும்
தேவதேவன் ஸங்கரனே தந்தையாகவும்
உடைய யானை முக்கடவுளை
வணங்குகின்றேன்



ஓம்
மாதா மஹர் மஹாசைலம்,
மஹஸ்தத் அபிதா மஹம்,
காரணம் ஜகதாம் வந்தே,
கண்டத் உபரி வாரணம்
அம்மாவின் அப்பாவே இமயமலை
அப்பாவுக்கு அப்பாவே இல்லை
இவ்வளவு பெருமைகள் உடைய
அகில உலகுக்கே காரணகர்த்தா
ஆகிய யானை முகம் உடை கடவுளை வணங்கின்றேன்.

திருச்சிற்றம்பலம்
ஓங்கும் ஒரு மருப்பானை உயிர்க்கு உயிராய் இருப்பானை உரக வேந்தன்
தாங்கும் நெடு நிலத்து ஆனை முகத்தானை வதைத்தானை சைலமாலைப்
பாங்கு வைத்து மழுத்தானை பரித்தான் தந்து அழித்தானை பசும் பொற்கோட்டு
பூங் கமல பதத்தானை பொருவில் ஐந்து கரத்தானைப் போற்றல் செய்வாம்
(சிவராத்திரி புராணம்)

### ப்ரம்மோற்சவ கால கிரியா நிகழ்வுகள் விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| ◆ 19.06.2026 | – வெள்ளிக்கிழமை | – மாலை | 06.00 | விநாயக வழிபாடு, ஸாந்திகர்மல்கள் |
| ◆ 20.06.2026 | – சனிக்கிழமை | – பகல் | 10.45 | துவஜாரோகணம் [கொடியேற்றம்] |
| ◆ 27.06.2026 | – சனிக்கிழமை | – இரவு | 08.00 | சப்பறத்திருவிழா |
| ◆ 28.06.2026 | – ஞாயிற்றுக்கிழமை | – பகல் | 10.00 | இரதோற்சவம் [தேர்] |
| ◆ 29.06.2026 | – திங்கட்கிழமை | – பகல் | 10.00 | தீர்த்தோற்சவம் |
| ◆ 29.06.2026 | – திங்கட்கிழமை | – மாலை | | துவஜ அவரோகணம் [கொடி இறக்கம்] |
| ◆ 30.06.2026 | – செவ்வாய்க்கிழமை | – மாலை | 06.00 | பூங்காவனம் |
| ◆ 01.07.2026 | – புதன்கிழமை | – முற்பகல் | 10.00 | ப்ராயச்சித்த அபிஷேகம் |
| ◆ 01.07.2026 | – புதன்கிழமை | – மாலை | 05. 00 | வைரவ ஆராதனை |

**தேவஸ்தான மஹோற்சவ சிவாச்சாரியார்- சகலாகம பண்டிதர்**
**சிவஸ்ரீ க.ச. சோமாஸ்கந்தக்குருக்கள் - பொன்னாலை வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்**

இலங்கை வேந்தன் இராவணேஸ்வரனை இராமபிரான் வதம் செய்ததனால் அவருக்கு பிடித்த தோஷங்களான ப்ரம்ம ஹத்தி (பிராமணனை கொன்ற தோஷம்) வீரஹத்தி நிறைவான ஒரு வீரமகனை கொன்ற தோஷம் ஆகியன நீங்கும் பொருட்டு இராமேஸ்வரத்தில் சிவனையும், வேதாரண்யத்தில் விநாயகப் பெருமானையும் பூஜித்ததனால் முறையே "ப்ரம்ம ஹத்தி" "வீரகத்தி" ஆகிய தோஷங்கள் நீங்கப்பெற்றார். வீரகத்தியை நீக்கி மூர்த்தமே "வீரகத்தி விநாயகர்" என வழிபடப் படுகின்றார். இவ் வீரகத்தி விநாயகர் மிகவும் புராதமான காலத்தில் இருந்து எமது சாவகச்சேரி கல்வயல் பதியினில் பெருங்குளம் என்னும் குளமும் வயலும் சேர்ந்த இடத்தினில் எளுந்தருளி அம்பலவாண வீரகத்தி விநாயகராக அருள் பாலிக்கின்றார். இவரை தொன்று தொட்டு "அந்தணர் என்போர் அறவோர்" என திருவள்ளுவப் பெருமானால் திருக்குறளில் விஷேஷிக்கப் பெற்ற மூத்த அந்தண குல சிவாச்சாரியர்கள் சிவாகம விதி முறைகளுக்கு அமைவாக பூஜை கைங்கர்யங்கள் செய்து பூசித்து வருகின்றனர்.

உத்கீதமே தத்பரமம் துப்ரஹ்ம தஸ்மின் ஸ்த்ரயம்
சுப்ரதிஷ்டா க அக்ஷரம் ச I
அத்ராந்தரம் ப்ரஹ்ம விதோ விதித்வா லீனா
ப்ரஹ்மணி தத்பார் : யோனி முத்தா: II

(அஃது பரம் ப்ரம்மம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது அதன்கண் மும்மை உண்டு அதுவே எல்லாவற்றுக்கும் உறுதியான ஆதாரம். அது அழிவு அற்றது. அதனுடை ஸாரத்தினை அறிகின்ற ஞானிகள் அதனையே நாடி நிற்கின்றனர். ப்ரம்மத்தில் ஒடுங்கி பிறப்பு இன்றி முத்திப்பேறு அடைகின்றனர்) என்கின்றது ஸ்வேதாச்வத உபநிடதம்
இதனையே மாணிக்கவாசகப் பெருமான்

வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆமா பாடி
சோதி திறம் பாடி சூழ் கொன்றைத்தார் பாடி
ஆதி திறம் பாடி அந்தம் ஆமா பாடி
பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளை தன்
பாதம் திறம் பாடி

என்று திருவெம்பாவை 14 ம் பாடல் மூலம் ஸ்தோத்தரிக்கின்றார்.

இப்படியான மூலகாரணன் ஆகிய எம் பெருமான் எமது ஆலத்தில் "அம்பலவாண" என் சிவ பெருமானுடைய பஞ்சகிருத்திய மூல நாமம் தாங்கி அம்பல வாண வீரகத்தி விநாயகராக எழுந்தருளி இந்த "பராபவ" 2026 வருஷத்தின் "ப்ரம்மோற்சவம்" என்னும் பெருந்திருவிழாவினை 20.06.2026 முற்பகல் 10.45 க்கு கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி 29.06.2026 தீர்த்தோற்சவத்துடன் பூரணம் ஆக திருவருள் பாலித்துள்ளார். இவ் ஆலய சூழலில் வசிப்பவர்கள், வசித்தவர்கள், வதிவிடமாகக்கொண்டு நாட்டு அசாதாரண சூழ்நிலைகள் நிமித்தம் தற்போது வெளியூரில் வெளி நாடுகளில் வாழ்கின்றவர்கள் மற்றும் எல்லா பக்த மஹா ஜனங்களும் தவறாது மேற்குறிப்பிட்ட உற்சவ காலங்களில் தரிசித்து உற்சவ மூர்த்தியிடம் "சாம்பவ தீட்சை" பெற்று தமது வாழ்வில் ஸகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வு வாழ இந்த ஆலயத்தின் தர்மபரிபால சபையினராலும் விழா உபயதாரர்களாலும் விண்ணப்பிக்கப் பெறுகின்றார்கள். பகல் விழா இறுதியில் சகல அடியவர்களுக்கும் எமது ஆலய "அன்னதான சபையினரால்" "திருவமுது ஆராதனம்" நிகழப்பெறும் என்பதனையும் தெரியப்படுத்துகின்றோம்.

"லோகே மைஸ்தா ஸுகினே பவந்து"
மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எல்லாம் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட்கு எல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கி
புல்குக உலகம் எல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க
- திருவிளையாட்டு புராணம்-

- ஸர்வம் கணார்ப்பணம் அஸ்து -
ஆலய தர்மபரிபாலன சபையினரும் மஹோற்சவ
உபய தாரர்களினதும் சார்பாக.

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| A.V. முருகதாஸன் | R. கிருஷ்ணசாமி |

(CR/47654)J-1



## ப்ரம்மோற்சவம் சிறப்படைய பிரார்த்தனை செய்பவர்கள்
சாவகச்சேரியின் முன்னணி பிரபல வர்த்தகர்
## சண்முகம் அன்ட் சன்ஸ் A9, கண்டி வீதி, சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL

# THE OPEN UNIVERSITY OF SRI LANKA
## JAFFNA REGIONAL CENTRE
### ADMISSION OPEN-2026

Applications are invited for the following Degree Programmes

**Bachelor of Pharmacy (Hons)**

Application Period : 15th May 2026 - 25th June 2026

Eligibility Requirements :
- Three (03) passes in the Science Stream at the G.C.E. A/L
- A minimum Credit Pass (C) in Chemistry at the G.C.E A/L
- A minimum Simple Pass (S) in English at the G.C.E O/L
- Test and / or Interview
- Equivalent qualifications may be considered

**Bachelor of Medical Laboratory Sciences (MLS) (Hons)**

Application Period : 15th May 2026 - 25th June 2026

Eligibility Requirements :
- Three (03) passes in Science Stream including Chemistry at the G.C.E A/L
- A minimum Simple Pass (S) in English at the G.C.E O/L
- Test and/or Interview
- Equivalent qualifications may be considered

**Bachelor of Science (Hons) in Nursing**

Application Period : 20th June 2026 - 26th July 2026

Eligibility Requirements :
- Diploma in Nursing / General Certificate in Nursing (MOH/OUSL)
- Three (03) passes in the Science Stream at the G.C.E. A/L (one sitting)
- A minimum Simple Pass (S) in English at the G.C.E O/L
- Exceptional Performance in selection interview
- Equivalent qualifications may be considered

**B.Sc (Hons) in Psychology**

Application Period : 20th June 2026 - 26th July 2026

Eligibility Requirements :
- Three (03) passes in Advanced Level (A/L) Examination (Any Stream) OR
- OUSL Foundation Courses (60 credits equivalents)
- Minimum Simple Pass (S) in English at the G.C.E.O/L
- Equivalent qualifications may be considered

**Apply through :** http://reginfo.ou.ac.lk/applyonline/ Apply Online only

**CONTACT DETAILS**
Jaffna Regional Centre
The Open University of Sri Lanka
021 222 3374
www.ou.ac.lk

The Registrar, The Open University of Sri Lanka, Nawala, Nugegoda.

OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL

# NALLUR PRADESHIYA SABHA
## INVITATION FOR BIDS
## SUPPLY AND INSTALLATION OF WASTE INCINERATOR WITH FLUE GAS TREATMENT SYSTEM

A. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Nallur Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, goods as specified in following Table.

B. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

C. To be eligible for contract award the successful bidder shall not have been blacklisted and shall need the following requirements and the additional details are provided in the bidding data sheet (Section II)
   1) Bidders shall have valid business registration
   2) Bidders shall also register themselves with the registrar of public contracts Sri Lanka, in terms of the public contract act no 03 of 1987 for the contracts exceeded Rs 5Mn.

D. Interested bidders may obtain further information from address given below in E and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs. (T.P:021-021-222-2700)

E. A complete set of Procurement documents in English language may be purchased by interested bidders on the submission of "Application for Procurement Documents" available in this office and upon payment of a non-refundable fee as specified in the table by cash on working days from 22.06.2026 to 06.07.2026 during 09.00 Hours to 15.00 Hours. The mode of payment will be by cash.

F. Bids must be delivered to Chairman, Divisional Procurement Committee, Nallur Pradeshiya Sabha, 14/5 Karuvapulam Road Kokuvil, Jaffna. on or before 10.00 Hours of 07.07.2026. Late bids will be rejected. Bids will be opened immediately after closing in the presence of bidders or their representatives who choose to attend.

G. Bid shall be valid for a remind 91 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 119 days from the bid opening.

H. Pre-bid meeting will be held at Conference Hall, Nallur Pradeshiya Sabha commencing at 11.00 am on 30.06.2026.


I. Divisional Procurement committee will have the right to make final decision in the regarding the acceptance or rejection of bids.

| | |
|---|---|
| Bid security validity Period | 2026-11-02 |
| Pre-Bid Meeting | 2026-06-30 |
| Bid Closing & Opening | 2026-07-07 |

| Reference No | Item | Qty | Non - refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/2026/Add.Stp/ Incinerator | Supply and Installation of Waste Incinerator with Flue gas treatment system | 01 | 6,000.00 | 350,000.00 |

Chairman
Divisional Procurement Committee
Nallur Pradeshiya Sabha
14/5 Karuvapulam Road, Kokuvil

(CR/47704) 2026.06.19



# கிளிநொச்சி பிரதேசசபைகளின் கீழ் 'யாட்' அமைத்து மணல் விநியோகம்

**கிளிநொச்சி, ஜூன் 19**

**கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிவரும் கடுமையான மணல் தட்டுப்பாடு மற்றும் கறுப்புச்சந்தை விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், இனிவரும் காலங்களில் பிரதேசசபைகளின் நேரடி ஆளுகையின் கீழ் 'மணல் யாட்' அமைத்து, அதனூடாகப் பொதுமக்களுக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் மணல் விநியோகத்தை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மணல் மற்றும் கிரவல் அகழ்வு, விநியோகம் தொடர்பான விசேட கலந்துரையாடலின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தெரிவிக்கையில்,

தற்போது மாவட்டத்தில் பல்வேறு அரச மற்றும் தனியார் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான மணலைப் பெறுக்கொள்வது மிகவும் சவாலான விடயமாக மாறியுள்ளது. குறிப்பாக, அரசாங்கத்தினால் சாதாரணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையை விட, வெளிச்சந்தையில் மணலின் விலை பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுவதால், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து நியாயமான விலைக்கு மணலைப் பெற்றுக் கொள்வதில் பெரும் தடங்கல்கள் ஏற்படுகின்றன. இதனால் மாவட்டத்தின் அத்தியாவசிய அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்த முடியாமல் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது-என்றார்.

அதற்கமைய மணல் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக கரைச்சிப் பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட ஆற்றுப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பான முறையில் மணலைப் பெற்றுக்கொள்ளுதல், ஆற்றில் பெருமளவில் படிந்துள்ள மணல் திட்டுக்களை அகழ்ந்து, அவற்றைச் சூழலுக்குப் பாதிப்பில்லாத பொருத்தமான இடங்களில் களஞ்சியப்படுத்துதல், ஆறுகளில் இருந்து அகழப்படும் மண்ணை இயந்திரங்களின் மூலம் கழுவிப் பயன்பாட்டுக்கு உகந்த மணலாக மாற்றுதல் ஆகியவை குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் அனைத்து துறைசார்ந்த திணைக்களத் தலைவர்களின் முன்மொழிவுக்கேற்ப எடுக்கப்பட்ட தீர்மானங்களை நெகிழ்வுத்தன்மையுடன் விரைவாகச் செயற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. (க-55)

# மடு ஆலய வளாகத்தில் புதிய மலசலகூடங்கள்

**மன்னார், ஜூன் 19**

மடு ஆலய வளாகத்தில், புதிய மலசலகூடங்களை அமைப்பதற்கான, செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மாவட்ட செயலக திட்டமிடல் கிளை மூலம் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மருதமடு ஆலய பெருவிழாவை முன்னிட்டு, மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மடு பரிபாலகர் அருட்பணி பி.ஜே.பெப்பி சோசை அடிகளார், டித்வா புயலால் மடு ஆலய வளாகத்திலுள்ள மலசலகூடங்கள் பாதிப்டைந்துள்ளன. குளிக்கும் தண்ணீர் மலசல கூடங்களுக்குள் நிரம்பி கடந்த காலங்களில் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது என்று சுட்டிக்காட்டினார். இதற்கு 'சூம்' மூலம் பதிலளித்த, கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி எம்.சத்திரு பிந்தோ, மடு ஆலயப் பகுதியில் டித்வா புனரமைப்பு வேலைக்காக அனுப்பப்பட்ட செலவு மதிப்பீடு 5 மில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளதால், அது திரும்ப அனுப்பப்பட்டுள்ளது. எனவே மீண்டும் 5 மில்லியன் ரூபாவுக்குள் செலவு மதீப்பீட்டைத் தயாரித்து உடனடியாக அனுப்பும் பட்சத்தில் அதற்குரிய நிதி ஒதுக்கீட்டை வழங்கமுடியும்- என்றார். இதற்குப் பதிலளித்த மாவட்டச் செயலர் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது- என்றார். (க-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

NORTHERN PROVINCIAL COUNCIL

# WALK - IN INTERVIEW

**Recruitment of Technical Staff on a Contract Basis**
**Infrastructure Development Works for Areas Affected by the "Ditwah" Cyclone – Northern Province**

The Northern Provincial Council invites applications from suitably qualified candidates for recruitment on a contract basis to the following positions under the Infrastructure Development Works Programme for Areas Affected by the *"Ditwah" Cyclone* in the Northern Province.

| | | |
|---|---|---|
| Engineer (Civil) | - | 10 Posts |
| Draughtsman | - | 05 Posts |
| Technical Officer | - | 20 Posts |
| Work Supervisor | - | 17 Posts |

**Interested and eligible candidates are invited to attend the Walk-In Interview according to the schedule given below:**

| | | |
|---|---|---|
| **Date** | : | 25 June 2026 |
| **Time** | : | 10.00 a.m. |
| **Venue** | : | Chief Secretary's Secretariat, Northern Province |

**Further particulars, including qualifications and other relevant information, are available on the official website of the Northern Province (www.np.gov.lk).**

***Thanuja Murugeson,***
Chief Secretary,
Northern Province.

**E-mail : *chiefsecnpc@gmail.com***
**Contact Number : *021 222 0840***

## வேலணை பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல் - 2026
## வேலணை நாலாவரை பொதுச்சந்தையில் ஆட்டிறைச்சிக் கடையினை வாராந்த சந்தைக்கு குத்தகைக்கு விடல் (வாரத்தில் ஒருநாள் மட்டும் இயங்குதல்)

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட வேலணை பொதுச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சிக் கடையினை 05.07.2026 தொடக்கம் 31.12.2026 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 19.06.2026 முதல் 02.07.2026 வரை (மு.ப- 9.00மணி முதல் -பி.ப 3.00மணி வரை)
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 03.07.2026 (வெள்ளிக்கிழமை) பி.ப 02.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி :- 03.07.2026 (வெள்ளிக்கிழமை) பி.ப 02.00 மணி

| தொ .இல | சந்தைகளின் பெயர் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | கடை இலக்கம் - 02 ஆட்டிறைச்சி கடை | 2,000.00 | 5,000.00 | ரூபா 1,000.00 ( நாள் ஒன்றிற்கு) |

**பொதுவான நிபந்தனைகள்**

1. கேள்வி பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளும் போது மேலுள்ள அட்டவணைக்கு அமைவாக கேள்வி வைப்புப் பணம், படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும்.
4. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **"தவிசாளர் வேலணை பிரதேச சபை வங்களாவடிச் சந்தி வேலணை"** எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் "** என்ற முகவரிக்கு 03.07.2026ம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
5. தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடையின் சித்திகர கேள்விதாரர் சித்திகர தொகையின் 10 நாட்களுக்குரிய குத்தகைத் தொகையினை சபையின் தலைமை அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்வதுடன் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினையும் செய்து கொள்ளல் வேண்டும்.
6. பொதுச்சந்தைகளில் இருந்து 500 மீற்றர் சுற்றளவுள்ள எல்லைக்குள் ஆட்டிறைச்சி விற்பனை செய்ய முடியாது.
7. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
8. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
9. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.
10. கேள்விகளை தகுந்த காரணங்களுடன் ஏற்றுக்கொள்வதற்கும் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நிராகரிப்பதற்குமான முழு அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.

- மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.
- குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு உடன்பட வேண்டும் என்பதுடன் விதந்துரைக்கப்படாத விடயங்கள் தொடர்பில் சபையின் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

திரு.சி.அசோக்குமார்
தவிசாளர்,
வேலணை பிரதேச சபை.
திகதி:- 19.06.2026

# மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து இடம்பெறும் திருவிழாக்களில் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும், எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (க-63)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 19

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக மகாபாரத தொடர் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் சைவப்புலவர் இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு 'மகாபாரதம்' எனும் தலைப்பில் தொடர்சொற்பொழிவு ஆற்றுவார். (ச-41-66)

# இறுதிப்போரில் சேவையாற்றிய வரதராஜாவுக்கு இருதயப் பாதிப்பு



முள்ளிவாய்க்கால் இறுதிப்போரின்போது, மக்களுடன் மக்களாக நின்று உயரிய சேவையாற்றிய, பொதுமருத்துவர் துரைராஜா வரதராஜா, கடுமையான இருதய நோய்ப் பாதிப்பால், கனடாவின் ரொறன்ரோவிலுள்ள மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்று வருகின்றார். அவரைக் காப்பாற்றும் முயற்சியில் மருத்துவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தன்னுடைய கணவருக்காக, பிரார்த்திக்குமாறு அவரது மனைவி மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-66)

# கலாசாலையில் திருவாசக விழா

நாயன்மார்களுள் ஒருவரான மாணிக்கவாசகர் குருபூசையை ஒட்டிக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்துமன்றம் நடத்தும் திருவாசக விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளரும், ஆசிரியருமான சைவப்புலவர்.கலாநிதி ஏ.அனுசாந்தன் கலந்துகொண்டு 'சைவத்தின் ஆணிவேர் திருவாசகம்' எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றுவார். அதனைத் தொடர்ந்து கலாசாலை முதல்வர் தலைமையில் 'திருவாசகம் ஒரு பன்முகப்பார்வை' எனும் பொருளில் கருத்தரங்கு இடம்பெறும். நிகழ்வில் கலாசாலை விரிவுரையாளர்களான கு.பாலசண்முகன், கவிஞர் வேல். நந்தகுமார், சைவப்புலவர் சி.கா.கமலநாதன் ஆகியோர் முறையே திருவாசகத்தில் உணர்வு, மொழி, சைவசித்தாந்தம் ஆகிய தலைப்புக ளில் கருத்துரைகளை வழங்குவர்.

ஆர்வமுள்ள அனைவரும் நிகழ்வில் பங்குபற்றிப் பயன்பெற முடியுமெனக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இந்து மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (ச-66)

# வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 19

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறும் திருவிழாக்களில் எதிர்வரும் ஜூலை மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், மாலை 7.30 மணிக்கு சப்பைரத வீதியுலாவும், எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை 4 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க)

## மணமகள் தேவை

1985 ம் ஆண்டு பிறந்த D சித்திரை நட்சத்திரம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

T.P.: 077 659 0606

(cr47636) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஈரானுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் ட்ரம்ப்!

வெர்சாய், ஜூன் 19
மேற்கு ஆசியாவில் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில், ஈரானுடனான வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார். ஜி-7 உச்சி மாநாட்டைத் தொடர்ந்து, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோனுடன் வெர்சாய் அரண்மனையில் நடைபெற்ற இரவு விருந்தின்போது ட்ரம்ப் தனிப்பட்ட முறையில் இதில் கையெழுத்திட்டார் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதற்கிடையில், அமெரிக்காவுடனான இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மின்னணு முறையில் கையொப்பமிடப்பட்டுள்ளது என்று ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகாயியும் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளார். இந்தச் செய்தி உலக அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. (ஏ-இ)

# ஈரானின் சொத்துகளை விடுவிக்கத் திட்டம் தயார்

தெஹ்ரான், ஜூன் 19
பல்வேறு நாடுகளில் முடக்கப்பட்டுள்ள ஈரான் நாட்டுக்குச் சொந்தமான சொத்துகளை விடுவிப்பதற்கான செயல்முறைகள், அந்நாட்டு மத்திய வங்கியுடன் இணைந்து நிறைவு செய்யப்பட்டுள்ளன என்று ஈரான் வெளியுறவு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் எஸ்மாயில் பகாய் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், ஈரான் தனது சொத்துகளைத் தனக்குத் தேவையானவாறு பயன்படுத்துவதற்கும், அதைக் கையாளுவதற்கும் 'முழுமையான உரிமை' கொண்டுள்ளது என்று குறிப்பிட்டார். இந்த உரிமையை நிலைநாட்டும் வகையில், ஈரான் மீது தற்போது நீடித்துவரும் அனைத்துப் பொருளாதாரத் தடைகளையும் நீக்குவதற்கு அமெரிக்கா கடமைப்பட்டுள்ளது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஏ-இ)



# 10 மில்லியன் ட்ரோன் உக்ரைனின் திட்டம்!

கீவ், ஜூன் 19
தற்போதைய போரில் ட்ரோன் தாக்குதல்களின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதால், நடப்பு ஆண்டில் 10 மில்லியன் ட்ரோன்களை உற்பத்தி செய்யும் இலக்கை நோக்கி உக்ரைன் பயணிக்கின்றது என்று அந்தநாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

தேவைப்பட்டால் இந்த ட்ரோன் உற்பத்தியை ஆண்டுக்கு 20 மில்லியனாக இரட்டிப்பாக்கும் திறன் உக்ரைனிடம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இம்முயற்சியானது, உக்ரைனின் உள்நாட்டு பாதுகாப்பு உற்பத்தியை விரிவுபடுத்தவும், ஆயுத விநியோகத்திற்காக வெளிநாடுகளைச் சார்ந்திருப்பதை பெருமளவு குறைக்கவும் உதவும் என ஜனாதிபதி ஜெலென்ஸ்கி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஏ-இ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
05 . 10 . 1951



இறப்பு
30 . 06 . 2025

யாழ் சரவணை மேற்கை பிறப்பிடமாகவும், வேலணை கிழக்கு, 1ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், நியூயோர்க், கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் ஞானவைரவர் வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த

## அமரர் இராமநாதன் பாலசுப்பிரமணியம் (யோகன்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.

அன்னார் கலாவின் கணவரும், பானுஜா (அமெரிக்கா), காலஞ்சென்ற ரேனுகா, தயாழினி, தர்மிளா, செந்தூரன் (கனடா), நேருஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், விமல் (அமெரிக்கா), சுதர்சன், குகவேர்ணன், சசி ஆகியோரின் மாமனாரும், விதுஷா, அம்சிகன் (அமெரிக்கா), பிருத்திகா, விபூசன், அமிஷா (அமெரிக்கா), ஜீவிதன், கிதுனன், பிரவின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

ஆண்டு ஒன்று போனாலும் அழியவில்லை உங்கள் நினைவு
அன்பின் உறைவிடமாகவும், பாசத்தின் சிகரமாகவும் வாழ்ந்த
எம் அன்புத் தெய்வமே
நீங்கள் வாழ்ந்த இவ்வுலகில் எம்மை வாழவைக்க ஓயாதுழைத்து
இப்போ ஓய்வெடுத்துக் கொண்டீர்களே
உங்கள் ஈடில்லா பாசத்திற்கு எங்கள் கண்ணீர் இணையாகுமா?
உருண்டு புரண்டு அழுகிறோம் உங்கள் செவிக்கு கேட்கவில்லையா?
ஓராண்டு அல்ல எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்....

(CS/61667) J-1

குடும்பத்தினர்

# பொறுப்புணர்வுடன் செயற்படுங்கள் நெதன்யாகுவுக்கு ட்ரம்ப் அறிவுரை!

வொஷிங்டன், ஜூன் 19
லெபனான் விவகாரத்தில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அதிக பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் ஹிஸ்புல்லாவை அவர்கள் கையாளும் விதம் திருப்தியளிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில், லெபனான் மீதான இஸ்ரேலின் புதிய தாக்குதல்கள் அமெரிக்காவுடனான இடைக்கால உடன்பாட்டை மீறும் செயலாகக் கருதப்படும் என ஈரான் எச்சரித்துள்ளது.

எனினும், அமெரிக்கா - ஈரான் உடன்பாடு எட்டப்பட்டிருந்தாலும், தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேல் படைகள் விலகப்போவதில்லை என பிரதமர் நெதன்யாகு மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இதேவேளை, ஈரானுடனான 60 நாள்கள் பேச்சுவார்த்தைக் காலத்தில் ஐ.நா. அணுசக்தி ஆய்வாளர்கள் மீண்டும் அந்நாட்டிற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும், உலகின் முக்கியமான வர்த்தகப் பாதையான ஹோர்மூஸ் நீரிணையில் எவ்விதக் கட்டண வசூல்களும் இடம்பெறாது என்றும் அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் தெரிவித்துள்ளார். (ஏ-இ)



# 'ஹோர்மூஸ் நீரிணை' இன்று முதல் வழமைக்கு

வொஷிங்டன், ஜூன் 19
கடந்த மூன்று மாதங்களாக மூடிக்கிடந்த முக்கியமான கடல்வழிப் பாதையான 'ஹோர்மூஸ் நீரிணை' இன்று முதல் முழுமையாகத் திறக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். அமெரிக்கா - ஈரான் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ள நிலையில், இந்தப் பாதையில் போர் ஏற்படுவதற்கு முந்தைய இயல்பு நிலை விரைவில் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின்படி, ஈரான் மீதான எண்ணெய் வர்த்தகத் தடைகளை நீக்க அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது. இதன்மூலம் ஈரான் தனது மசகு எண்ணெய் மற்றும் எரிபொருள்களை எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி சர்வதேசச் சந்தையில் விற்பனை செய்யமுடியும். அமெரிக்க-ஈரான் ஒப்பந்தம் காரணமாக உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை ஏற்கனவே சரியத் தொடங்கியுள்ளது. (ஏ-இ)




# போர்ப்பதற்றம் தணிந்ததால் கச்சா எண்ணெய் விலை சரிவு

வொஷிங்டன், ஜூன் 19
அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர்ப் பதற்றத்தை முடிவுக்குக் கொண்டுவரும் புதிய ஒப்பந்தம் காரணமாக, உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை 3 மாதங்களில் இல்லாத அளவிற்கு கடுமையாகச் சரிந்துள்ளது. பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 4 நாள்களில் 15வீதம் சரிந்து, பேரலுக்கு 80 டொலருக்கும் கீழ் குறைந்துள்ளது. வெஸ்ட் டெக்சாஸ் இன்டர்மீடியட் விலை 77 டொலரை நெருங்கியுள்ளது. உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் ஐந்தில் ஒரு பங்கைக் கையாளும் முக்கியமான நீர்வழிப்பாதையான 'ஹோர்மூஸ் ஜலசந்தி' மீதான முற்றுகையை அமெரிக்கா நீக்கவும், வர்த்தகக் கப்பல்களின் பாதுகாப்பை ஈரான் உறுதி செய்யவும் இவ்வொப்பந்தம் வழிவகை செய்கிறது. அத்துடன் ஈரானிய கச்சா எண்ணெய் ஏற்றுமதி மற்றும் வங்கி, காப்பீடு, போக்குவரத்துச் சேவைகளுக்கான தடைகளையும் வொஷிங்டன் நீக்கவுள்ளது. இந்த விநியோக அலையால் உலகளவில் பணவீக்க அழுத்தம் குறைந்துள்ளது. அமெரிக்காவில் மே மாதம் 4.56 டொலராக இருந்த ஒரு கலன் பெற்றோலின் சராசரி விலை, தற்போது 4 டொலரை நோக்கிக் குறைந்து நுகர்வோருக்கு பெரும் நிம்மதியை அளித்துள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துக!

## ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் இலங்கைக்கு வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 19

இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், அவற்றை மேலும் மேம்படுத்தி மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் கடந்த ஆண்டு இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது ஏற்கனவே முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைவாக மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், அவற்றை மேம்படுத்துவதற்கும், மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குமான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தப்பட்டது.

அத்தோடு பொருளாதார நெருக்கடி, கடன் மறுசீரமைப்பு மற்றும் இந்நெருக்கடியைக் கையாள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பவற்றின் விளைவாக மனித உரிமைகள் மீது ஏற்பட்டிருக்கும் தாக்கங்களையும் உயர்ஸ்தானிகர் அடிக்கோடிட்டுக் காண்பித்தார்.

இலங்கை அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உத்தியோகபூர்வ அறிக்கைகள் கணிசமான காலத் தாமதத்துடனேயே சமர்ப்பிக்கப்பட்டன. அதுமாத்திரமன்றி, உலகளாவிய காலாந்தர மீளாய்வின் போது நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தாமாகவே முன்வந்து ஒரு இடைக்கால அறிக்கையைத் தயாரித்திருக்கின்றது.

அதேவேளை வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஐ.நா. குழு மீளாய்வுக் கூட்டங்களில் இலங்கையிலிருந்து வெளியேறிய வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர், பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் நேரடியாகக் கலந்துகொண்டு தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்துச் சர்வதேச மேடைகளில் சாட்சியமளித்திருந்தனர் என்றும் ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

மணமகள் தேவை

1985 ம் ஆண்டு பிறந்த D சித்திரை நட்சத்திரம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

T.P.: 077 659 0606

(cr47636) (N.1)

யா/நீர்வேலி அத்தியார் இந்துவின்

மணிவிழா வாழ்த்தும் சேவை நயப்புப் பாராட்டும்



இன்று 19.06.2026 வெள்ளிக்கிழமை ஓய்வுபெறும் எங்கள் கல்லூரியின் கணித பாட ஆசிரியை

செல்வி சண்முகநாதன் கிரிஜா (SLTS-I)

(பழைய மாணவி)

இளவழகு முகமும்
சுறுசுறுப்புடன் புன்முறுவலுமாய்
பௌவியமாய் மொழிபேசி
கணிதம் தனை போதித்து
கற்ற அன்னையின் வளர்ச்சிக்கு
உறுதுணையாய் நின்று
மாண்புறு கல்விப் பணிதனை நல்கிய
எங்கள் கிரிஜா ஆசிரியையே
வளம் பல தந்தது நும் பணி ஆகவே
நலம் பல பெற்று வாழ
வாழ்த்துகின்றோம்
வாழி பல்லாண்டு !!!!!

Best Wishes

சேவைக்காலம்
கிளி/ கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம்
02.08.1989-04.02.1991
பலாலி ஆசிரிய கலாசாலை
05.02.1991-31.12.1992
கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்
01.01.1993-05.07.1998
யா//நீர்வேலி றோ.க.த.க பாடசாலை
06.07.1998-06.06.2010
யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
07.06.2010 இன்று வரை

வாழ்த்துவோர்
ஆசிரிய நட்புறவுக் கழகத்தினர்

## மரநடுகை



வவுனியா, ஜூன் 19

வவுனியா பூந்தோட்டம் பிரதான வீதியின் இரு மருங்கிலும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பூந்தோட்டம் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் மாநகர முதல்வர் சு.காண்டீபன் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நடுகை செய்தார். (ச-110)

# வீதியால் சடலங்களைக் கொண்டு செல்ல வழித்தட அனுமதியிருப்பது கட்டாயம்

மாயனங்களுக்குச் சடலங்களை வீதியால் கொண்டு செல்வதற்கு, வழித்தட அனுமதி பெற்றிருத்தல் அவசியம். இவற்றை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கரைச்சிப் பிரதேசசபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கரைச்சிப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் 40க்கும் அதிகமான சடலங்களை எரியூட்டும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறித்த பகுதிகளில் காணப்படுகின்ற மயானங்களில் இறந்தவர்களை எரியூட்டுவதோ அல்லது நல்லடக்கம் செய்வதோ தொடர்பாக பிரதேசசபையின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் மரணம் நிகழும் வீட்டில் ஒரு முறையும், இறுதிக் கிரியைகள் நடைபெறும் பகுதியில் ஒருமுறையும் மட்டுமே பட்டாசுகளைக் கொளுத்த முடியும். அதேவேளை மரண நிகழ்வின் போது இசைக்கப்படுகின்ற அமங்கல வாத்தியமும் அவ்வாறே இசைக்கப்பட வேண்டும். அதேவேளை காடாத்துகள் செய்வதற்காக காலை தொடக்கம் மாலை 7 மணி வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறித்த நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் மயானத்துக்குள் செல்வதற்கு அனுமதியில்லை. சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக இந்த விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன-என்றார். (க-113)

இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடாங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில்.

074 196 4945, 076 682 7368

இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(CS 32007)A

மரண அறிவித்தல்



தோற்றம்
09 . 11 . 1961

மறைவு
18 . 06 . 2026

இராமலிங்கம் சத்தியேந்திரா

(ஓய்வுபெற்ற காசாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், சமாதான நீதிவான், நல்லூர் பிரதேச செயலகம், இணக்கசபை உறுப்பினர்)

82/1, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சத்தியேந்திரா அவர்கள் நேற்று (18.06.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் இராமலிங்கம் - தேவாமிர்தம் தம்பதியரின் அன்பு மகனும், சுமதி (சித்தமருத்துவ பகுதி, யாழ் மாநகரசபை) அவர்களின் அன்புக் கணவரும், குபேந்திரா ( உள்ளக பயிற்சி மருத்துவர், சித்த மருத்துவ போதனா வைத்தியசாலை, கைதடி), தபேந்திரா (இறுதி வருட மாணவன், பொறியியல் பீடம், மொறட்டுவை பல்கலைக்கழகம்), அமிர்தஹரணி (மாணவி, யா/நல்லூர் சென் பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் காசிலிங்கம் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், தேவராசா மாலினிதேவி தர்மகுலசிங்கம் ரோகினிதேவி, இரவீந்திரன், காலஞ்சென்ற மகேந்திரன், குலேந்திரன், காலஞ்சென்ற திலகேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கிருதரன், நவரத்தினம், தர்சினி (கொலன்ட்), தர்மகுலசிங்கம், புளோரா ரேணுகா, மகேந்திரன் ரஞ்சினி, குலேந்திரன் ரவிந்திராதேவி, திலகேந்திரன் மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், நவரத்தினம், நிம்மதி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (19.06.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
076 241 2023
076 387 6495

(CS 31999)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை...

இதேவேளை, தெல்லிப்பழை புற்று நோய் பிரிவு விசேட அலகாக மத்தியின் கீழ் நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழ்த் தேசியக் கட்சி என்ற வகையில் மாகாணசபைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற நிர்வாகக் கட்டமைப்புகளை மத்திக்குள் கொண்டு செல்வதை நாங்கள் விரும்பவில்லை. ஏனெனில் ஒற்றையாட்சிக்குள் இருக்கும் மத்திய அரசாங்கம் பணம் மற்றும் அங்கீகாரத்தை எமக்கு வழங்காமல் இருக்கும் போது மாகாணசபைக் கட்டமைப்புகள் இயங்க முடியாமல் போகும். அத்தகைய ஆபத்து தற்போது தெல்லிப்பழை மருத்துவமனையையும் சூழ்ந்துள்ளது.
கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டபோது மருத்துவர் சிறீபவானந்தராஜா தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையையும், புற்றுநோய் மருத்துவமனையையும் மத்திய அரசின் கீழ் கொண்டு செல்வதற்கு பரிந்துரைத்தார். இதற்கு தேசிய மக்கள் சக்தி அல்லாத ஏனைய கட்சிகள் உடன்படவில்லை. மாறாக, புற்றுநோய் மருத்துவமனையை விசேட பிரிவாக அங்கீகரித்து மத்தியின் கீழ் கொண்டுசென்று இயக்குவதற்கு இணக்கம் தெரிவித்தோம். தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையை மாகாணசபைக்குள் வைத்திருந்து செயற்படுத்த வேண்டும் என்றும் நாம் வலியுறுத்தினோம். ஆனால் இன்று நடந்த தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சிறீபவானந்தராஜா அனைத்துமே மத்திக்குள் கொண்டுபோக வேண்டும் என்ற கருத்தை தெரிவித்தார். அந்த முடிவை நாளை (இன்று) மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் எடுக்கப் போவதாகவும் அறிவித்தார்.
கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுனா இராமநாதன், தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையை விசேட பிரிவாகமத்திக்குள் கொண்டுபோவதை முழுமையாக எதிர்த்ததுடன், மாகாணத்துக்குள் உள்ள விடயத்தை கொண்டுபோக முடியாது- என்றார். ஆனால் இன்று சிறீபவானந்த ராஜா கருத்து தெரிவித்தபோது அதனை ஆமோதித்தார். இது அர்ச்சுனா இராமநாதனுடைய நிலைப்பாடாக இருக்கிறது.
மாகாணசபைகள் தொடர்பாக எனக்கு இருக்கும் விமர்சனமே, அரசாங்கம் திட்டமிட்டு மாகாணசபைக்கு கீழ் இருக்கின்ற அனைத்து விடயங்களையும் தோற்கடிக்கும் வகையில் செயற்படுகின்றது என்பதுதான். மாகாணசபைகள் தேவையில்லை என்ற கருத்தைத் திட்டமிட்டு உருவாக்கும் வகையிலேயே இந்த முன்னெடுப்புகள் இடம்பெறுகின்றன.
மத்தியின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஏனைய மாகாணங்களில் உள்ள மருத்துவமனைகளுடன் ஒப்பிடும்போது ஆளணியும் போதுமானதாக இல்லை. அத்துடன் நிதியும் இல்லை. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை தேசிய மருத்துவமனையாகத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருந்தார். ஆனால், தற்போதைய அரசாங்கம் அத்தகைய திட்டங்கள் இல்லாமலேயே செயற்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வரவேண்டிய வளங்களை அநுராதபுரம் மருத்துவமனைக்கு வழங்கவே நடவடிக்கை எடுத்துள்ளனர். எனவே, இதை நாம் ஏற்கவோ அல்லது அனுமதிக்கவோ மாட்டோம் - என்றார்.
(அ-ம-26)

## ஹெரோய்னுடன்...

யாழ்ப்பாணம் - அரியாலைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டிருந்தார். அவருடைய சொத்துக்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் இடம்பெற்று வந்தன. இதையடுத்தே, சட்டவிரோதமாக ஈட்டப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அவருக்குச் சொந்தமான பல சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. டிங்கி படகு, இரண்டு மோட்டார்சைக்கிள்கள், சொகுசுக்கார் மற்றும் கப் ரக வாகனம் என்பனவே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன என யாழ். பிராந்திய குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## சுரேஷ்...

துள்ளது. உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்ததாவது:-
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவோம் என்று தெரிவித்து ஆட்சிக்கு வந்த திசைகாட்டி அரசாங்கம் அந்தச் சட்டத்தைத் தற்போதுவரை பயன்படுத்தி வருகின்றது. இது ஏற்றுக்கொள் எக்கூடிய விடயமல்ல. பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். இதேவேளை, சுரேஷ் சாலேவுக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்குவதற்கு எமது கட்சி தயாரில்லை. நீதியான முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு - என்றார். (அ-ம)

## மாகாணசபையை...

அமுலாக்கம் செய்வதற்கு அரசாங்கம் தயங்குவது ஏன்? இவ்வாறு ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
திசைகாட்டி அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் இந்தவருடம் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என நான் நம்பவில்லை. ஏனெனில், தேர்தலை நடத்தும் விருப்பம் அரசாங்கத்துக்கு இருப்பதுபோன்று தோன்றவில்லை. எமது நாட்டைப் பொறுத்தவரை தென்னிலங்கையை விடவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கே முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டும். உயிரற்ற எதிர்க்கட்சியே நாட்டில் உள்ளது. மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்கும் முதுகெலும்புகூட எதிர்க்கட்சிகளுக்கு இல்லை - என்றார்.
(அ-ம-இ)

## செம்மணிப்...

இடம்பெற்று வருகின்றன. அந்தப் புதைகுழிக்குள் இருந்து அண்மைக்காலமாக பெருமளவு என்புத் தொகுதிகள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையிலேயே, நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தலைமையிலான குழுவினர் இன்று ஆராயவுள்ளனர். (அ-ம-26)

## கோத்தாபயவின்...

இந்த மனுதொடர்பில் நேற்று விசாரணை இடம்பெற்றது. இதையடுத்தே, மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் 24ஆம் திகதிவரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## கோத்தாபய...

பட்டிருந்தது. இதுதொடர்பில் கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தால் விசாரணைகள் இடம்பெற்று வந்தன. இதன் தொடர்ச்சியாக நேற்று அவர் கைது செய்யப்பட்டார். இதையடுத்து ஜுலை மாதம் முதலாம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம)

## ரயிலுடன்...


பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றும் பகலகம பகுதியை சேர்ந்த நிரோஷன் லக்மால் (வயது-26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். குறித்த இராணுவச் சிப்பாய் விடுமுறையில் வீட்டுக்கு சென்றிருந்த நிலையில், விடுமுறை காலம் முடிவடைந்த பின்னர் நீண்டகாலம் கடமைக்குத் திரும்பாதிருந்தார். நேற்றையதினம் மீண்டும் கடமைக்குத் திரும்பிய நிலையிலேயே நண்பகலளவில் ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பின்னர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## பிரதேச...

திணைக்கள உதவி ஆணையாளராக முன்னர் பணியாற்றியிருந்தார். இந்தக் காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஒரு நடவடிக்கை தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய முறைப்பாட்டைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு விசாரணை நடத்தி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இதையடுத்தே, பொதுச்சேவைகள் ஆணைக்குழு அவரை பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளது.
(அ-ம-110)

## 7 என்புத்...

செம்மணிப்புதைகுழி மீதான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளில் 28 ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே, புதைகுழிக்குள் இருந்து மேலும் 7 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் ஒரு குழந்தையின் என்புத்தொகுதி உட்பட 5 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. இதன்படி செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 387 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 367 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், புதைகுழிக்குள் இருந்து பாசிமணி, வளையல், ஆணிகள் மற்றும் பிளாஸ்ரிக் துண்டு என்பன சான்றுப் பொருள்களாக மீட்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி ரணித்தா அகழ்வுப் பணிகளில் முன்னிலையாகி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
(அ-ம-26)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### இலங்கையில்

# துரித உணவுப் பழக்கங்களால் 12% மாணவர்கள் உடற்பருமன்



கொழும்பு, ஜுன் 19

**இலங்கையிலுள்ள பாடசாலை மாணவர்களில் சுமார் 12 சதவீதமானோர் அதிக உடல் எடையுடனும், 3 சதவீதமானோர் மிக மோசமான உடற்பருமன் நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

2024ஆம் ஆண்டின் உலகளாவிய பாடசாலை அடிப்படையிலான மாணவர் சுகாதாரக் கணக்கெடுப்பின் மூலம் இந்த விவரம் வெளியிடப்பட்டுள்ளது. இதுகுறித்து, சுகாதார அமைச்சின் ஊட்டச்சத்துப் பிரிவின் பணிப்பாளரும் விசேட மருத்துவ நிபுணருமான மொனிகா விஜேரத்ன தெரிவிக்கையில்,

நாட்டின் 13 முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட இடைநிலை மற்றும் உயர்தரப் பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு, அவர்களின் நாளாந்த உணவுப் பழக்கவழக்கங்கள் குறித்து இம்முறை விரிவான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

அதில், மாணவர்கள் நாளாந்தம் அல்லது அடிக்கடி உட்கொள்ளும் உணவுகளாக குளிர்பானங்கள் 17.04வீதமும் அதிக உப்புள்ள உணவுகள் 28.05வீதமும் அதிக கொழுப்புள்ள உணவுகள் 29 வீதமும் அதிக சர்க்கரையுள்ள உணவுகள் 41.00வீதமும் பதிவாகியுள்ளது. இலங்கையின் தற்போதைய மக்கள் தொகை வளர்ச்சி வீதம் கணிசமாகக் குறைவடைந்து வரும் தற்போதைய இக்கட்டான காலகட்டத்தில், நாட்டின் எதிர்காலத் தூண்களாக விளங்கவேண்டிய பாடசாலைப் பிள்ளைகள் இவ்வாறான ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் தவறான உணவுப் பழக்கங்களால் முன்கூட்டியே நோயாளிகளாக மாறுவது பெரும் கவலைக்குரிய விடயமாகும். பாடசாலைப் பருவத்திலேயே இவ்வாறான துரித உணவுகள் மற்றும் செயற்கைக் குளிர்பானங்களுக்குப் பிள்ளைகள் பழகிவிடுவதைக் கட்டுப்படுத்த, பெற்றோரும் பாடசாலை நிர்வாகமும் விழிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும் - என்றார். (ச-இ)

## டொலரை ரூபாவாக மாற்றும் கால அவகாசம் குறைப்பு!

### மத்திய வங்கிக்கு கோப் குழு எச்சரிக்கை

ஏற்றுமதியாளர்களுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு நாணய வருவாயை இலங்கை ரூபாவாக மாற்றுவதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசத்தை குறைப்பதற்கு இலங்கை மத்திய வங்கி எடுத்துள்ள தீர்மானம் குறித்து, நாடாளுமன்றத்தின் அரசாங்க நிதி பற்றிய குழு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இந்தக் குழுவின் விசேட கூட்டத்தின்போதே இந்தவிடயம் விவாதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கடந்த 2024 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நடைமுறையின்படி, ஏற்றுமதி வருவாயை ரூபாவாக மாற்றுவதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், புதிய சட்டத்தின்மூலம் அது ஒரு மாதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கு விளக்கமளித்த மத்திய வங்கியின் உயர்மட்ட அதிகாரிகள், தற்போதைய வெளிநாட்டு நாணய மாற்றுவீதம் மற்றும் வெளிநாட்டு நாணயச் சந்தையில் நிலவும் லேசான ஸ்திரமற்ற தன்மை, வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மை பற்றாக்குறை ஆகியவற்றைச் சமாளிக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது-என்றனர்.

அதற்குப் பதிலளித்த அரசாங்க நிதி பற்றிய குழு, இதனால் இலங்கைச் சந்தை மற்றும் வங்கி முறைமை மீது ஏற்றுமதியாளர்கள் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் கொண்டுள்ள சந்தை நம்பிக்கை வெகுவாகக் குறைவடைவதற்குக் காரணியாக அமைந்துவிடும் என சுட்டிக்காட்டியது. (ச-இ)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜுன் 19

தொல்புரம் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவின் வடக்கு மதில் திறப்புவிழா தொல்பொருள் ஆரம்ப மருத்துவப்பிரிவு மண்டபத்தில் நாளை முற்பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளது. பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் எம்.ஹர்ஷன் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வி.பி.எஸ்.டி.பத்திரண பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். மருத்துவர் ஜி.பவானி சிறப்பு விருந்தினராகவும், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம)

## கற்கைநெறிக்கான விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிகள் மாவட்ட அலுவலக கணினிப் பயிற்சிநிலையத்தில் நடைபெறும். விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் ஜுலை மாதம் 12ஆம் திகதியாகும். விண்ணப்பதாரி க.பொ.த. (சா/தர) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம் ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த. (உ/தர) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும், இந்தக் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அ.அ.இலக்கம், கல்வித்தகைமைகள் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். மேலதிக விவரங்களுக்கு 021 222 2383 அல்லது 071 455 3772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும் என மாவட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ச-41)

## 15 வீத சுங்கத் தள்ளுபடி நீக்கத்தால் வாகன விலை பன்மடங்கு உயரும்

### இறக்குமதியாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 19

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பாவிக்கப்பட்ட வாகனங்களுக்கான 15 சதவீத சுங்கப் பெறுமதி குறைப்பு நீக்கப்படுமாக இருந்தால், சந்தையிலுள்ள வாகனங்களின் விலை பன்மடங்கு அதிகரித்து நுகர்வோரை மிகக் கடுமையாகப் பாதிக்கும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தச் சங்கத்தின் உப தலைவரும் ஊடகப் பேச்சாளருமான அரோஷ ரொட்ரிகோ தெரிவிக்கையில்,

தொழிற்சாலையின் உண்மையான மொத்த விலையைப் பெறவே இந்த 15% கழிவு 2016 முதல் வழங்கப்படுகிறது. இதனை நீக்குவது அநீதியானது.

கடந்த மே 1 இல் சொகுசு வரியும், மே 15 இல் 150% கூடுதல் வரியும் விதிக்கப்பட்ட நிலையில், டொலர் மற்றும் யென் மதிப்புகளும் உயர்ந்துள்ளன. இதனுடன் இந்தச் சுங்கக் கழிவும் நீக்கப்பட்டால் நுகர்வோரால் வாகனங்களை வாங்க முடியாது.

10 வருடங்கள் பழமையான லொறியை 20 இலட்சத்துக்கு வாங்கினாலும், சுங்கம் அதன் புதிய விலையான 1.2 கோடியை வைத்தே வரி கணக்கிடுகிறது. முறையான தேய்மானக் கழிவு வழங்கப்படுவதில்லை. புதிய வாகனங்களுக்கும் பாவிக்கப்பட்ட வாகனங்களுக்கும் இடையிலான விலை இடைவெளியைத் தக்கவைத்து, சாதாரண நுகர்வோரைப் பாதுகாக்க இந்த 15% சுங்கக் குறைப்பை அரசாங்கம் கட்டாயம் தக்கவைக்க வேண்டும் - என்றார். (ச-இ)

## செம்மணிப்...

இலங்கையின் மிகப்பெரும் மனிதப் புதைகுழியாக செம்மணிப் புதைகுழி உருப்பெற்றுள்ளது. இதையடுத்தே, செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி இன்று காலைமுதல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர். இந்தப் போராட்டத்துக்கு மக்களும், சிவில் அமைப்புகளும் தமது ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-ம-66)

**பணிப்பெண் தேவை**

யாழ் நகரிற்கு அண்மையில் உள்ள வீடொன்றிற்கு பிள்ளை பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைகளை செய்வதற்கு 40 - 50 வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 023 7593

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 19.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.